# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## " பயப்படாதே கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். "

யோவேல் 2:21

செய்தி மலர்
2024
ஜீன்

இதழ் : 14
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# உன் விசுவாசமே உன்னை இரட்சிக்கும்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக் கொள்ளுகிறேன்.

கடந்த மே மாதம் முழுவதும் கரம் பற்றி நடத்தின நம் தேவன் வரும் ஜுன் மாதத்திலும் நம்மை சத்தியத்திற்குள் வழி நடத்துவார். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருடைய கிருபையினால் நம் சபையில் 10-வது மற்றும் 12-வது வகுப்பு தேர்வு எழுதிய நம் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்ததற்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். தொடர்ந்து நம் பிள்ளைகளின் எதிர்கால ஆசீர்வாதங்களுக்காக தனிப்பட்ட ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆபிரகாம் தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். (ரோம-4:21-24)

ஆம் பிரியமானவர்களே, ஆபிரகாமைப் போல நாமும் இயேசு கிறிஸ்து, உயிரோடு எழுந்து நம்மில் வாசம் செய்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

## 1. நூற்றுக்கு அதிபதி . . .

ஒரு நூற்றுக்கு அதிபதி பிரியமான தன்னுடைய வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தியாய் இருப்பதை பார்த்து இயேசுவிடம் போனால் குணமடையலாம் என்று விசுவாசித்து அவன் சொன்னான் "ஆண்டவரே நீர் வருத்தப்பட வேண்டாம் நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரனல்ல நான் உம்மிடத்தில் வரவும் என்னை பாத்திரவனாக எண்ணவில்லை. ஓர் வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று கூறினார்" இதைக் கேட்ட ஆச்சிரியமடைந்து இயேசு கிறிஸ்து தமக்கு பின் செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். (லூக்-7:2-10) அவர் வேறொன்றும் சொல்லவில்லை ஆனால் அதே விநாடியிலேயே வீட்டிலே வியாதியாய் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள். ஒரு மனிதனுடைய விசுவாசம் எவ்வளவு பெரிய கிரியையை நடப்பித்தது பார்த்தீர்களா? நாமும் இப்படிப்பட்ட விசுவாச வார்த்தைகளையே பேச வேண்டும் என்று இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கிறார். அவர் சதா காலமும் உயிரேபாடிருக்கிற தேவன். நம்முடைய வேதனைகள் அவருக்குத்தெரியும். நிச்சயமாக நம்முடைய விசுவாசத்தை கனப்படுத்தி நம் வாழ்க்கையில் அற்புதங்கள் செய்வார்.

## 2. ஜெப ஆலயத் தலையவனாகிய யவீரு . . .

யவீரு என்னும் ஒருவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால் தன் வீட்டுக்கு வரும்படி வேண்டிக்கொண்டான். அவர் போவதற்குள் வீட்டிலிருந்து அந்தப் பெண் மரித்துப்போனாள். போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்று செய்தி வந்தது. ஆனால் இயேசுவோ விசுவாசமுள்ளவனாயிரு அப்பொழுது இறந்த சிறுமி இரட்சிக்கப்படுவாள் என்றார். யவீரு அப்படியே விசுவாசித்தான். நடந்தது என்ன தெரியுமா? இயேசு யவீருவின் வீட்டிற்கு சென்று பிரேதத்தின் கையைப் பிடித்து பிள்ளையை எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது. உடனே அவள் எழுந்திருந்தாள். இயேசு அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். (லூக்-8:41-56)

ஆம் பிரியமானவர்களே, நம் இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்து சாவை வென்றவர். அவர் சொன்னார் மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன். (வெளி-1:18) அவரே ஜீவனுக்கு அதிபதி. அவர் சொன்னார் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று. (யோவான்-11:25)

## 3. பிறவிக்குருடர்கள்...

வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்கள் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். இயேசு நின்று நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று இருக்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள் கொஞ்சமும் தயங்காமல் ஆண்டவரே எங்கள் கண்களை திறக்க வேண்டும் என்றார்கள். அவர்களுக்கு விசுவாசம் பாருங்கள். இயேசு கண் பார்வை தருவார் என்று தயங்காமல் விசுவாசித்தார்கள். இயேசு மனதுருகி அவர்களின் கண்களை தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்கு பின் சென்றார்கள். (மத்-20:32-34)

ஆம் பிரியமானவர்களே, இந்தப்பிறவிக்குருடர்களுக்கு இருந்த அதே விசுவாசம் நமக்கும் வேண்டும். நல்ல வேலையை எதிர்பார்த்து விசுவாசத்தோடு காத்திருக்கிறீர்களா? கட்டாயம் இயேசு உங்களுக்கு நல்ல வேலையைத் தருவார். திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் பிள்ளைச்செல்வம் இல்லையே என்று உள்ளத்தில் ஏங்கிக்கொண்டிருக்கிறீர்களோ? விசுவாசியுங்கள் அப்பொழுது நீங்கள் பிள்ளைச் செல்வங்களை பெற்றுக்கொள்வீர்கள். இதே போல நோய்கள், வேதனைகள், வருத்தங்கள் உங்களை சூழ்ந்திருக்கிறதோ? மனங்கலங்காதிருங்கள். விசுவாசத்தோடு நூற்றுக்கு அதிபதியைப் போல, யவீருவைப் போல, பிறவிக்குருடர்களைப் போல இயேசுவை விசுவாசியுங்கள். உங்கள் விசுவாசத்தை இயேசு பார்ப்பார், உங்கள் மனவிருப்பத்தின்படி உங்களுக்கு அருள் செய்வார்.

உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (லூக்-8:48)
நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவா-11:40)
உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1-யோவா-5:4)
உங்கள் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது (மத்-9:29)
விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் (மாற்கு-9:23)
விசுவாசித்தினாலே நீதிமான் பிழைப்பான். (எபி-10:38)
விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசா-28:16)

கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும்
அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஜெயம்

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பார்ந்த உடன்பிறந்தோர்களே, இத்தேவ செய்தியின் மூலம் நம்மை வினாவிக்கொள்ள வேண்டியது என்னவென்றால் தேவன் அருளிய கல்யான வஸ்திரத்தை நாம் அணிந்துகொண்டுள்ளோமா? இல்லையா. அதற்கு ஆதாரமாக நாம் தியானிக்க வேண்டிய உவமை மத்-28:1-4 -ல் கல்யான விருந்தின் உவமை. இதில் நாம் எவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்றால்,

ராஜா-தேவன், குமாரன்-சபை, கல்யாண விருந்தின் நிகழ்வு-சபை ஐக்கியம், படைக்கப்படும் விருந்து-பரிசுத்த ஆவியானவர். அபாத்திரமாய் நடந்த முதலாம் அழைக்கப்பட்டவர்கள்-தேவனால் அழைக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், வழிகளில் காணப்பட்ட நல்லார்,பொல்லார்- இஸ்ரவேல் அல்லாத பிற ஜனத்தார். கல்யான வஸ்திரம் -அன்பு. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா வரும் நிகழ்வு-நியாத்தீர்ப்பின் நாள்.

தேவனுடைய பிராதான விருப்பமே உலக மக்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துதான் நம் பாவங்களுக்காக சிலுவையில் பலியானார். அவர் இரத்தத்தில் மூலமாகத்தான் நாம் மீட்கப்பட்டோம் என்று விசுவாசித்து அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. பழைய ஏற்பாட்டின் காலங்களில் தாம் தான் மெய்யான தேவன் என்று பிரஸ்தாப்படுத்த அவர் தெரிந்தெடுத்த ஜனம்தான் இஸ்ரவேல் மக்கள். எவ்வாறெனில் ஆதி-22:18-ல் நீ என் சொல்லுக்குக் கீழ்பபடிந்தபடியினால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சட்டதிட்டங்கள் உடன்படிக்கை கொடுத்தார். அதை கைக்கொண்டு பரிசுத்தமாக வாழும்போது அவர்கள் பந்தியில் தேவன் பலத்த காரியங்களைச் செய்தார். அவ்வாறு அவர் செய்த அதிசயமான கிரியைகளை புறஜாதியான மக்கள் கண்டு இஸ்ரவேலின் தேவனே மெய்யான தேவன் என்று விசுவாசித்த அவரை ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கும் இஸ்ரவேல் ஜனங்களின் பிரமாணத்தை பின்பற்றி தேவனை ஆராதித்து தேவனுக்கு பலிகளைச் செலுத்தலாம். எண்ணா-15:15 சபையாராகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் இருக்க வேண்டும் என்பது உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாயிருக்கக்கடவது. கர்த்தருக்கு முன்பாக அந்நியனும் உங்களைப் போலவே இருக்கவேண்டும்.

தேவனை விசுவாசித்து அவரைத் தன் சொந்த தேவனாக ஏற்றுக்கொள்ள விரும்பும் புறஜாதி ஜனங்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கும் தேவ பிரமாணங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்தக் கட்டளை. ஆனால் அவர்களே அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விட்டார்கள். புதிய ஏற்பாட்டின் ஜனங்களை நாமும், தேவனை அறியாத ஜனங்கள், அவரை விசுவாசித்து அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினார். அவர்களுக்கு தேவனுடைய கட்டளைகளைப் போதித்து அவர்களும் தேவனை ஆராதித்து பரிசுத்த ஆவியானவரோடு ஐக்கியமாக்க தேவன் நமக்கு தந்த இடம்தான் தேவ சபை. எனவே தேவனின் பிரதான ஆசையே தேவ சபை கட்டப்பட வேண்டும் என்பதே. அவ்வாறு நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளாக தேவ சபையாக கட்டப்பட வேண்டும் என்றார். நாம் அனைவரும் தரித்துக்கொள்ள வேண்டிய தேவ வஸ்திரம் என்னவென்றால் தேவ அன்பு. கொலே–3:14.

ஆகவே தேவ அன்பை தரித்தவர்களாய். நாம் அனைவரும் ஒருவர் குறைகளை ஒருவருக்கு மன்னித்து ஒருவரை ஒருவர் தாங்கி, தேவ சபை கட்டப்படுவதற்கு ஒருமனப்படுவோம். ஒருவர் தேவ அன்பை தரித்து உள்ளாரா இல்லை என்பதை தீர்மானிப்பது தேவன் ஒருவரே அதுவும் நியாயத்தீர்ப்பின் நாளில்தான். எனவே நாம் யாரையும் தீர்மானிக்க வேண்டாம். தேவ வசனம் கூறுகிறது நியாயத்தீர்ப்பு தேவ சபையிலிருந்து தான் துவங்கும். அதுவும் உவமையில் குறிப்பிட்டவாறு தேவன் தந்த வஸ்திரம் தரித்திரவராக சபை ஜனங்களையே அவர் புறம்பே தள்ளுவார். ஏனெனில் தேவ அன்பை தரித்திராதவர்கள் தேவ சபை கட்டப்படுவதற்கு தடையாக இருப்பார். அவர்கள் தடையாக இருக்கிறார்களே என்று அவர்களுக்கே தெரிவதில்லை.

ஆகவே கல்யான வஸ்திரம் என்றும் தேவ அன்பை நாம் தரித்துக்கொண்டு தேவ சபை கட்டப்படுவதற்கு பயன்பட்டு அவர் இராஜ்ஜியத்திற்கு பிரவேசிப்போம். ஆனால் ஒரு கசப்பான உண்மை என்னவென்றால் தேவ அன்பை தரித்து கொள்ள அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆனால் தேவ அன்பை தரித்துக் கொண்ட தெரிந்துகொள்ளபட்டவர்கள் சிலரே.

நம்மை நாமே ஆராய்ந்து தேவ அன்பை தரித்துக் கொள்வோம். நம் முழு இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுப்போம், தேவனின் வருகையில் காணப்படுவோம்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமெண்.

இப்படிக்கு,
அன்பு சகோதரன்.
ஜெகன்

# வாலிபர் பகுதி

ஒரே பேறானவரும் இருக்கிறவரும் வரப்போகிறவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துதல்

நாகமான் என்பதற்கு இன்பம் என்று பொருள் ஆனால் அவன் வாழ்க்கையில் இன்பமில்லாதவனாக இருந்தான். அதற்கு அவன் குஷ்டரோகியாக இருந்ததே காரணம். 2-ராஜா-5:1-ல் சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும், எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். குஷ்டரோகி என்றால் தீட்டு என்று ஒதுக்கி வைக்கப்பட்டு பாளையத்துக்கு புறம்பாக வைக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் நாகமான் சீரிய ராஜாவினிடத்தில் உயர்ந்த பதவியாகிய படைத்தலைவனாக அரண்மனையிலே முக்கியமானவனாகவும் காணப்பட்டான். உண்மையிலே இது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாகவும் ஆராயப்பட வேண்டிய பகுதியாகவும் உள்ளது. நாகமான் ஆதி-46:21-ன் படி பென்யமீன் கோத்திரத்தான். அவன் இஸ்ரவேல் ஜனத்தோடு கூட இருந்திருக்க வேண்டும். அவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனையே தன் தெய்வமாக கொண்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக அவன் சீரிய தேசத்திலே ரிம்மோன் தெய்வத்திற்கு பணிகிறவனாக காணப்பட்டான். ஆனால் அவன் தன் துக்கத்திற்கு காரணமாயிருந்த குஷ்டரோகத்தின் மூலம் தன் தேவனிடத்திற்கு வந்து சேர்ந்தான் அருமையானவர்களே, சில துக்கங்கள் பாடுகளின் வழியாக அந்நிய தெய்வத்தை விட்டு வழிமாறி வாழும்போது நம் தேவனிடத்தில் நாம் போய் சேருகிறோம் என்று இந்த பகுதியில் நாம் கற்று கொள்கிறோம்.

அடுத்தபடியாக 2-ராஜா-5:2-ல் இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணை சிறைபிடித்து வந்திருக்கிறார்கள். அவள் நாகமானின் மனைவிக்கும் பணிவிடை செய்து கொண்டிருக்கிறாள். 3-ம் வசனத்தில் அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்று சொல்வதை வாசிக்கிறோம். அதனை ஒப்புக்கொண்ட நாச்சியாரும் (நாகமானின் மனைவி) நாகமானிடம் அறிவிக்க நாகமானும் சமாரியாவிற்கு போக ராஜாவின் அனுமதி பெற்று ஆயத்தம் செய்கிறான். இஸ்ரவேலின் 10 தாலந்து சேக்கல் நிறை பொன்னையும் பத்து மாற்று வஸ்திரங்களையும் சீரியாவின் ராஜாவோ இஸ்ரவேல் ராஜாவுக்கு நிருபத்தையும் கொடுத்து விடுகிறான். நாகமானும் அவன் ஊழியக்காரனும் சமாரியா வந்து சீரியாவின் ராஜா கொடுத்த நிருபத்தை சமாரியாவின்

ராஜாவிடம் கொடுக்கிறான். அந்த நிரூபத்தில் இந்த நிரூபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டு வருவான். நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது. இதை வாசித்த இஸ்ரவேலின் ராஜா அந்த நிரூபத்தையும் தன் வஸ்திரங்களையும் கிழித்து கொண்டு கொல்லவும், உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்று புலம்புவதைக் காண்கிறோம்.

அன்பான சகோதர சகோதரிகளே, இதை வாசிக்கும் போது நீங்கள் ஒன்றை புரிந்திருப்பீர்கள். இஸ்ரவேலின் தேவன் அற்புதங்களை செய்வார் என்று சிறுபெண்ணிற்கு தெரிந்திருந்தது. ஆனால் நாட்டை ஆளும் ராஜாவுக்கோ அது தெரியவில்லை. இன்றைக்கு நாம் நம்மை சுற்றியுள்ள சிறியவர்களை மதிக்கிறோமா? என்று சிந்தித்துப் பார்ப்போம். இல்லை அவர்களை உதாசினப்படுத்தி விட்டு பெரியவர்களையும், உயர்ந்தவர்களையும் நாடி ஓடுகிறோமா? என்று சிந்தித்துப் பார்ப்போம். அதன் பின்பு எலிசா தீர்க்கதரிசி அவர்களை அவரிடத்தில் அனுப்பி விட சொன்னார். அதன்படி எலிசா தீர்க்கதரிசியினிடத்தில் போகிறான். அங்கு அவர் யோர்தானில் 7 தரம் ஸ்நானம் பண்ணு என்று கூறுகிறார். அதைக் கேட்டு நாகமான் கோவப்பட்டாலும், தன் ஊழியக்காரனின் ஆலோசனையின் படி ஸ்நானம் பண்ணுகிறான். அவனுடைய குஷ்டரோகம் மாறி சிறு பிள்ளையின் மாம்சத்தை போல் ஆனது. அப்பொழுது அவன் கூட்டத்தோடு எலிசா தீர்க்கதரிசியிடம் வந்து "இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" என்று அறிக்கையிட்டதுமில்லாமல் அவன் உண்மையான தெய்வத்தை அல்லாமல் வேறே தெய்வத்துக்கு பலிகளை செய்தோமே என்று குத்துண்டவனாய் எலிசா தீர்க்கதரிசியினிடத்தில் என் சூழ்நிலையின் காரணமாக வேலையின் காரணமாக ரிம்மோன் கோயிலில் பணிய வேண்டும் என்று கூறி மன்னிப்பு கூறுவதை 2-ராஜா-5:18-ல் கவனிக்கிறோம்.

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். அற்புதத்தைப் பெற்றோம் போதும் என்று சொல்லி பழைய பாவ வாழ்க்கையோடு வாழ்கிறீர்களா? இல்லை மன்னிப்பு கேட்டு தேவனோடு வாழ்கிறீர்களா? சிந்தித்து பார்ப்போம். சிறப்பான ஆசீர்வாதங்களோடு வாழ்வோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

வாலிபம் இயேசுவுக்கே..

 மிஷனரி செய்திகள்

## பாஸ்டர் மாற்கு டேனியல் பன்டேன் (1923–1989)

டேனியல் மாற்கு பன்டேன் கனடாவில் வின்னிப்பெக் என்ற இடத்தில் 1923 ஆம் ஆண்டு ஜனவரி 26–ம் தேதி பிறந்தார். அவர் தகப்பனார் ஒரு பிரசங்கியார். பிரசங்கிப்பதை கேட்டு மகிழ்ந்த மாற்கு, தானும் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்று விருப்பங்கொண்டார். தன்னுடைய தாயின் தெய்வ பக்தி அவரை அதிகம் கவர்ந்தது. ஏழு வயது இளைஞனாக இருக்கும்போதே மாற்கு தன்னை தேவனுக்கென்று அர்ப்பணித்தார். ஊழியம் செய்த மிஷனெரிகளின் வரலாற்றைக் கேட்டபோதெல்லாம் அகமகிழ்ந்தார். ஆப்பிரிக்கா, சைபீரியா போன்ற நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்த கென்ஸ்டிவன்சனின் வாழ்க்கை சரிதை, அவரின் ஏழாம் வயதிலேயே அவரை அதிகம் கவர்ந்தது.

மாற்கு தனது 16–வது வயதில் டொரோன்டோவிலுள்ள கடை ஒன்றில் வேலையில் சேர்ந்தார். அங்கு சேர்ந்த சில வாரங்களில் பணம் வசூலிக்கும் இடத்தில் பணியமர்த்தப்பட்டார். நாணயமான கடின உழைப்பைக் கண்ட அவருடைய மேலாளரின் பாராட்டுதலைப் பெற்றார். ஒருநாள் இரவு படுக்கைக்கு செல்லும் சமயம் ஆண்டவர் தன்னோடு பேசுவதை தெளிவாக அவர் உணர்ந்தார். உடனே முழங்காலில் நின்று ஆண்டவரே இந்த உலகக் காரியங்களை இச்சிக்கும் தன்மையை என்னிலிருந்து எடுத்துப் போடும். நான் உமக்கு ஊழியம் செய்ய வாக்களிக்கிறேன் என்று கூறினார். இதைத் தொடர்ந்து தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு கடவுளுடைய வேலையை செய்யலானார். அவர் பொறுப்பேற்ற திருச்சபை வாட்ரோஸ் என்ற இடத்தில் அமைந்திருந்தது.

மாற்கு அத்திருச்சபைச் பொறுப்பேற்ற சமயம் அதின் அங்கத்தினர்கள் ஆறு பேர் மட்டுமே என்ற போதிலும், அந்த ஊழியத்தில் தன்னுடைய வாழ்க்கையையே மாற்றம் காணச் செய்தது. 21வது வயதில் சுவிசேஷகராகச் செல்வதற்கான அழைப்பை அவர் பெற்றார். 1944–ஆம் வருடம் 2 அன்று ஒரு மிஷனெரியின் மகளாகிய ஹல்டாவை திருமணம் செய்து கொண்டார். 1952–ம் ஆண்டு வெளிநாட்டுக்குச் சென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற தன் விருப்பத்தை தன் மனைவியிடம் தெரிவித்தார். மூன்று மாதங்களே ஆயின. அதற்குள் தேவனிடதிலிருந்து புதிய அழைப்பு வந்தது. இது பற்றி மாற்கு கூறுகிறார். "இந்த உள் அழைப்பை நான் வேறு யாரிடமும் கூறவில்லை ஆனாலும் மிஷனெரி தலைமையகத்திலிருந்து உடனே கொல்கத்தாவுக்கு போகும்படி பணிக்கப்பட்டோம்."

.....தொடர்ச்சி 16–ம் பக்கத்தில்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

சகோ. ஜான் கெட்சன்
செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வன். வெங்கடேஷ் ராஜன்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
செல்வன். பெஸ்டஸ் சாலமன் முருகன்
சகோ. ராபின்ராஜ்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வன். கிங்ஸ்டன் ஐசக்
சகோ. ஜஸ்டின்
செல்வன். ரயான் சதீஷ்குமார்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
சகோ.A.ஆரோக்கியதாஸ்(camp)
சகோ. கிரன் குமார்
செல்வன். ஸெர்வின் டைடஸ் சிவகுமார்

செல்வன்.வினோத் வடிவேலு
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
சகோ. பக்தராஜ்
செல்வன். ஆகாஷ் பாலமுருகன்
செல்வன். ஜோஷ்வா ஜான்சன்
சகோதரி. ஷீபா பிரசாத்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
சகோதரி. வனிதா .K
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. எபிஷா ஜோனி எபிநேசர்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
சகோதரி. பாக்கியா ரவிஜான் பீட்டர்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி. கிரேஸ் ஜோய்ஸ் பிராங்ளின்
செல்வன். கவின் ஆன்டணி
சகோ.கிறிஸ்டோபர் . M
செல்வன். டால்டன் விபின்
சகோ. ஜஸ்டின்

gpwe;j ehs; kw;Wk; jpUkz ehis mDrupf;fpw cq;fs; vy;NyhiuAk; rigNahuhf tho;j;JfpNwhk;.

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. M. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட் ஜெயகுமார்

திருமதி & திரு. ஜெரேமியா
திருமதி & திரு. மகேஷ் ராஜ்
திருமதி & திரு. ராஜ்/சங்கீதா
திருமதி & திரு. வினோத்குமார்

# 2024 – ஜீன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/06/2024 | சகோ.சுகுமார் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 09/06/2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ. பக்த ராஜ் |
| 16/06/2024 | சகோ. தாமஸ் | சகோ. பிராங்ளின் |
| 23/06/2024 | சகோ. சுபின் சிங் | சகோ. M. கிறிஸ்டோபர் |
| 30/06/2024 | சகோ. சிவக்குமார் | சகோ. அசோக் குமார் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/06/2024 | சகோ. வில்சன் | சகோ.ஸ்டாலின் |
| 14/06/2024 | சகோ. டேவிட் | சகோ. பிரசாத் |
| 21/06/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/06/2024 | சகோ. வேலுராமர் | சகோ. ஆரோக்கியதாஸ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**13/6/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**28/6/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – ஏசாயா – 34 முதல் 66 அதிகாரங்கள் வரை

**29/6/2024 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – எபேசியர்

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:15 ரை
( June முதல் August வரை விடுமுறை )

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 ஜீன் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. சமாரிய மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி அந்த மலையின் மேல் ஒரு பட்டணத்தை கட்டினது யார்?
2. "நான் பூலோகத்தோர் யாவரும் போகிற வழியே போகிறேன்" என்றவன் யார்?
3. முன்னூறு கேடகங்களை பொன் தகட்டால் செய்தவன் யார்?
4. கந்தவர்கங்களையும், பொன்னையும், இரத்தினங்களையும், ஒட்டகங்கள் மேல் ஏற்றி கொண்டு வந்தவன் யார்?
5. ஒரு விதவையிடம் குடிக்க தண்ணீர் கேட்டவன் யார்?
6. எரிகோவை திரும்ப கட்டினதினால் தன் இரு குமாரரை சாக கொடுத்தவன் யார்?
7. நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன் என்றவன் யார்?
8. கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய தன் புருஷனை தூண்டிவிட்ட ஸ்திரி யார்?
9. புது சால்வையை போர்த்தி கொண்டிருந்தது யார்?
10. அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாய் இருந்தது" அவன் யார்?
11. சத்துருக்களை கண்டு பயந்து கூக்கிரலிட்ட ராஜா யார்?
12. "அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தை போல் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய்யிருக்கவில்லை" அவன் யார்?
13. அலங்கம் இடிந்து விழுந்து செத்தவர்கள் எத்தனை பேர்?
14. வெள்ளி பாத்திரங்களும்,பொற்பாத்திரங்களும்,வஸ்திரங்களும், ஆயுதங்களும்,கந்தவர்கங்களும், குதிரைகளும்,கோவேறு கழுதைகளும்,காணிக்கையாக கிடைக்கபெற்றது யாருக்கு? கொடுத்தது யார்?
15. கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்து கொள்ளும் எனவேண்டிகொண்டவன் யார்?

**விடைகளை வருகின்ற 20-06-2024 க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்**

**" I இராஜாக்கள் "**

**அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

# 2024 - மே மாத வேத வினாவுக்கு விடை

1. அப்சலோம் II சாமு 14:25
2. பத்சேபாள் II சாமு 11:2,3
3. அப்சலோம் II சாமு 15:5,6
4. தாவீதிடம் மேவி போசேத் II சாமு 19:25,26
5. யோனதாப் II சாமு 11:3
6. அப்சலோம் II சாமு 18:14,15
7. அகித்தோப்பேல் II சாமு 17:23
8. ப்ர்சிலா II சாமு 19:37
9. தாவீது II சாமு 12:20
10. பெனாயா II சாமு 23:21
11. அப்னேர் II சாமு 3:8
12. பெனாயா II சாமு 23:20
13. தாவீது II சாமு 1:13
14. பெனாயா II சாமு 23:20
15. தாமார் II சாமு 13:1

## 2024- மே மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. ஜீனா சதீஸ்குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. தயா ஏசுரத்தினம்
SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்
SIS. ஷீபா அருண்
SIS. சாந்தி
SIS. போத்தியம்மாள்
SIS. பத்மினி வர்க்கீஸ்

# சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாம் இந்த ஜீன் மாத இதழில் வாழ, வழி தேடிப் போய் மாய வலையில் சிக்கி வாழ்க்கையை இழந்து போன லோத்தின் மனைவியை பற்றி பார்க்கலாம் (ஆதி-13,19,19 அதிகாரம்)

## 1. சுகபோகமான வாழ்வை தெரிந்து கொண்டவள் (ஆதி-13)

ஆபிரகாமும், லோத்தும் எகிப்தை விட்டு தென்தேசத்திற்கு வருகிறார்கள். அவர்களுடைய ஆஸ்தி மிகதியாயிருந்தபடியால் ஒருமித்து வாசம் பண்ண முடியவில்லை. எனவே ஆபிரகாம் லோத்திடம் நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன். நீ வலது புறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன் என்று கூறுகிறார். உடனே லோத்து தன் கண்களை ஏறெடுத்து பார்த்து தன் கண்களுக்குச் செழிப்பாய் தோன்றிய சோதோம், கொமோரா தெரிந்து கொள்ளுகிறான். இந்த நேரத்தில் லோத்தின் மனைவி அவனை தடை பண்ணியிருக்கலாம், ஆனால் அவளோ தான் சுகபோகமாய் வாழ செழிப்பாக காணப்பட்ட சோதோம் கொமோராவையே தெரிந்து கொண்டாள். சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று 2-தீமோ : 5,6-ல் கூறப்பட்டுள்ளது. நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம்.

## 2. தன் குடும்பத்தை நடத்த அறியாதவள் (ஆதி-19:14)

லோத்தும் அவன் மனைவியும் தங்களுடைய இரண்டு மகள்களுக்கும் ஏற்ற துணையை தங்களுடைய ஜனத்தில் தேடாமல் தாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த தேசத்திலேயே தெரிந்து கொண்டார்கள். தேவனைப் பற்றி அறிவும் பயமும் இல்லாத தேவதூதர்கள் மூலமாய் சொன்ன வார்த்தையை லோத்து அவர்களுக்கு அறிவித்த போது பரியாசம் பண்ணினார்கள். ஆனால் நோவாவின் மருமக்களுக்கு இப்படிப்பட்ட எச்சரிக்கை வந்தபோது அவர்கள் பேழைக்கு வந்து தங்களை பாதுகாத்துக்கொண்டார்கள். லோத்துவின் மருமக்கள் தங்களை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள தெரியாத போலியாளின் மக்களாயிருந்தார்கள். நாம் நம் குடும்பத்தை கர்த்தருடைய சித்தத்தின்படி ஞானத்தோடு வழிநடத்துகிறோமா? என்று நாம் இப்போது சிந்திப்போம்.

## 3. தேவ எச்சரிப்பை அலட்சியப்படுத்தியவள் (ஆதி-19:15-25)

கிழக்கு வெளுக்கு நேரத்தில் தேவ தூதர்கள் பட்டணத்திற்கு வரும் தண்டனையில் அழியாதபடிக்கு துரிதப்படுத்தியும் அவர்கள் தாமதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தூதர்கள் அவர்கள் கைகளைப் பிடித்து வெளியே கொண்டு போய் விட்டு உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டு பாராதே இந்த சமபூமியில் நில்லாதே என்று சொன்ன பிறகும் அவர் அந்த எச்சரிப்பை அசட்டை பண்ணி அவள் அந்த பாவ உலகத்தை விட்டு வர மனதில்லாமல் பின்னிட்டு பார்த்து உப்புத்தூணாள் என்று பார்க்கிறோம்.

லூக்-17:37-ல் இவள் இன்றும் கூட நமக்கு எச்சரிக்கையாக வைக்கப்பட்டுள்ளாள். மேலும் அந்த சோதோம் கொமோரா பட்டணங்களுக்கு நேரிட்டது இப்போது நியாயத்தீர்ப்புக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். லோத்தின் மனைவி போன்ற குணாதிசயங்கள் நம்முடைய வாழ்வில் காணப்படுமாயின் எல்லாவற்றையும் விட்டு ஞானத்தோடும், விழிப்போடும் வாழ்ந்து தேவனுடைய சித்தம் நிறைவேற காத்திருப்போம்.

**தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**

இப்படிக்கு,
அன்பு சகோதரி,
**செலின் டேவிட்**

## I, II சாமுவேல் ஒரு பார்வை

1. எழுதியவர் – சாமுவேல்
2. எழுதப்பட்ட காலம் கிமு 1204-கிமு 1035
3. முக்கிய குறிப்பு – இஸ்ரவேலரின் நூறு வருட வரலாற்றை இதில் காணலாம்.

### I சாமுவேல்

அதிகாரங்கள் 31 , வசனங்கள் 811

1. சாமுவேலின் வாழ்க்கையும், ஊழியமும் ( 1:1 , 1:17 )
2. சவுலின் வாழ்க்கையும், ஊழியமும் ( 9:1 , 15 :35 , 31:1-13 )
3. தாவீதின் வாழ்க்கையும், ஊழியமும் ( 16:1 , 30 :31 )

### II சாமுவேல்

அதிகாரங்கள் 24 , வசனங்கள் 695

4. தாவீதின் ஊழியம் ( 1:1 , 24 :25 )

மாற்குவும், மனைவியும், மனைவியின் தாயாருமாக ஆகஸ்ட் 1954–ம் ஆண்டு இந்தியா வந்து சேர்ந்தனர். ஆரம்ப நாளிலிருந்து பலவித கஷ்டங்கள், சோதனைகள், பண நெருக்கடிகள், தனிமை, என்று ஏகப்பட்ட நெருக்கங்கள் இத்தனை இடர்பாடுகளும், தொல்லைகளும் அவர்களின் ஊழிய மகிமையின் மத்தியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. தங்களின் ஊழியம் அநேக ஏழை மக்களையும், சுகவீனரையும், பசியுற்றோரையும் தொட்டு, அவர்களின் வாழ்க்கையைப் பிரகாசமடைய செய்கிறது என்ற உண்மை அவர்களை மெய்சிலிர்க்க செய்தது.

1964–ம் ஆண்டு மாற்குவின் குடும்பத்தினர் 230 மாணவர்களுடன் அசெம்பிளீஸ் ஆப் காட் பள்ளிக் கூடத்தை கல்கத்தாவில் நிறுவினர். இந்த பள்ளிக்கூடம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தது. இன்று பாலர் வகுப்பு முதல் இளைநிலை கல்லூரி வரையில் ஆலமரம் போல் பொலிவுடன் விளங்குகிறது. இப்படி சிறிய அளவில் ஆரம்பித்து தற்போது 10000 மாணவர்கள் கல்வி கற்கும் 20 பள்ளிகளாக மிஷன் ஆப் மெர்ஸி வளர்ந்திருக்கிறது.

1984–ம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் 15 மில்லியன் மக்கள் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொழுது ஐக்கிய நாட்டுச் சபையுடன் சேர்ந்து தங்கள் வீடுகளை இழந்து தவித்த மக்களுக்கு மாற்குவும் அவரது குழுவினரும் உதவி செய்தனர். ஆதரவற்ற சிறுவர்களுக்கும், வறுமையின் நிமித்தம், பள்ளிக்கூட படிப்பை கைவிட்ட சிறார்களுக்கும் உதவும் படியாக சிறுவர் இல்லம் ஒன்றை மாற்கு பண்டேன் தொடங்கினார். 1965–ம் ஆண்டு மாணவர்களுகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தையும் ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு இத்திட்டம் பயன் அளித்தது.

மருத்துவ ஊழியம் ஆரம்பிக்க வேண்டும் என்ற பண்டேன் தம்பதியினரின் கனவு 1977–ல் கைகூடியது. அரசாங்கத்திடமிருந்து இதற்கென்று ஒரு நிலம் ஆச்சரியமாக இவர்களுக்கு வழங்கப்பட்டது. அதுவரையில் 16 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையை ராய்டு நடத்தி வந்தார். தேவனுக்கென்று பல்வேறு ஊழியங்களை 34 ஆண்டுகள் சிறப்பாக நிறைவேற்றிய பண்டேன் ஜீன் மாதம் 1989 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய கல்லறையில் பர்மா புகழ் ஜட்சன் எழுதிய ஜெபம் பதிக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு ஒரே ஒரு வேண்டுதல் ஒரே ஒரு வாஞ்சை, என் கடமையை முடித்து இந்திய மண்ணிலுள்ள கல்லறையில் துயில்வது. பண்டேன் மரித்துவிட்டார் ஆனால் அவருடைய ஊழியம் தொடர்கிறது. மாற்கு மரித்தாலும் ஆயிரமாயிரம் பேர் பயன் பெறும் விதமாய் அவர் பணி இன்றும் தொடர்கிறது. நீங்கள் இப்படிப்பட்ட பணிக்குத் தயாரா?

# Kids Corner

## Fyona Christober




## Joshua Johnson



# ACADEMIC WINNERS

## 2023 – 2024

### BEGINNER – A

*I RANK*

- DHIYA SUBIN

*II RANK*

- AARON VIJAYAN

*III RANK*

- KAITLYN ALWIN

### BEGINNER – B

*I RANK*

- BRYAN SATHEESH
- DION BENSAM
- RIYA STEPHEN

*II RANK*

- ARAN RAJASELVAN

*III RANK*

- HANNAH BABU

### BEGINNER – C

*I RANK*

- EZEKIEL JOY
- JEEVAN PRASAD

*II RANK*

- KAREN BEBIT

*III RANK*

- SAYA STALIN

### PRIMARY

*I RANK*

- SOLOMON IMMANUEL

*II RANK*

- RHEUL STEPHEN

*III RANK*

- AADITH SUBIN
- PAUL THOMAS

### JUNIOR

*I RANK*

- KEZIAH JOHNBOSCO
- RITIKSHA PRASAD
- RYAN SATHEESH

*II RANK*

- SIFENSHIKA SAM

*III RANK*

- JOSHUA JOHNSON

### INTERMEDIATE

*I RANK*

- STEFANA SATHEESH

*II RANK*

- JERALD JESTINE

*III RANK*

- VINCY DAVID

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில










# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.


Private Circulation only